| | | | | | |
|---|---|---|---|---|---|
| Scale | A | Tempo | 100 | Style | Ballroom> Schlagar Rumba |

11. என் தேவனாகிய கர்த்தர்

என் தேவனாகிய கர்த்தாவே - எந்தன்
முழு மனதோடும் முழு ஆத்மாவோடும்
முழு பெலத்தோடும் அன்பு கூறுவேன் (மாற் 12:30)

1

ஆவியானவரே உம்மை ஆவியோடும்
உண்மையோடே தொழுவோம் (யோவான் 4:23)
துதியின் உடை அணிந்து என்றென்றும் (ஏசா 61:3)
ஸ்தோத்திரப்பலியிடுவோம் (எபிரே 13:15) - என் தேவ

2

தேவனே நீர் எந்தன் தேவனன்றோ
அதிகாலமே தேடுவோம் (நீதி 8:17)
துதித்தலே இன்பமும் ஏற்றதுமாய் (சங் 147:1)
என்றென்றும் இருக்கிறதே - என் தேவ

3

மானானது நீரோடைகளையே
வாஞ்சித்து கதருமாப்போல்
என் ஆத்மா உம்மையே
என்றென்றும் வாஞ்சித்து கதர்கின்றதே (சங் 42:1)- என் தேவ

4

ஆயிரம் நாளைப் பார்க்கிலும்
உம் பிரகாரத்தின் ஒரே நாள் நல்லதன்றோ
ஆகாமிய கூடாரம் வேண்டாம்
தேவனுடைய ஆலயம் தெரிந்து கொண்டேன் (சங் 84:10)

---